# VLAMBARAM™ இலவசம் விளம்பரம்™

FREE ☎: 416 282-8059

மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை



வீடு விற்பது, வாங்குவது வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற

☎: (416) 491- 4002 / 287 - 2183

ராஜா எம். மகேந்திரன்
sales rep.

*நம்பிக்கை * நேர்மை * திறமை*



நதி VIII | FEBRUARY 15, 1998 | பாலம் 04



- ❊ குடும்ப ஆரோக்கியம் எமது காப்புறுதியை பாதிக்குமா? (பக்கம் 13)
- ❊ யோகாசனத்தில் வில்லாசனம் என்றால் என்ன? (பக்கம் 4)
- ❊ றெட் மீற் (Red Meat) சாப்பிடலாமா? (பக்கம் 5)
- ❊ நடிகர் திலகத்தின் குரு யார்? (பக்கம் 7)
- ❊ *கனடாவில் சிறந்த சாரதியாவது எப்படி?* (பக்கம் 3)
- ❊ சிவபெருமானின் தலையில் இருக்கு சந்திரன் என்னத்தைக் வெளிப்படுத்துகிறது (பக்கம் 8)
- ❊ "நிருபிராண்ட" இன் உறைகளை சேர்த்துவிட்டீர்களா (பக்கம் 8,9)


உங்கள் நண்பராயினும் தான் மேதாவி என நினைப்பவராயினும் ஒரு வார்த்தையை பலமுறை பாவித்து பேச்சின் இடையிடையே சொல்லிக் கொண்டு இருந்தால் நீங்களும் அதே வார்த்தையை அவரைப் போல் சொல்லுங்கள் அல்லது பாவியுங்கள். அவர் வெட்கப்பட்டுச் சிறிது சிறிதாக தன்னுடைய பழக்கத்தை மாற்றிக் கொள்வார்.


## ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ்-☎ 261-6883

## MOVING DELIVERY

- * FOR SMALL OR BIG MOVING
- * REASONABLE RATES
- * RELIABLE SERVICES

☎: (416) 286-7562

CELLULAR PHONE: 562-7977

## PRIVATE TUITION

ENGLISH / MATH

BY AN EXPERIENCED TEACHER

GRADE 3 TO GRADE 10

☎: (416) 447-6700

## SINGAPORE PAGING



Motorola Brovo $39.00
NEC RELAY $39.00
MotorolaPronto $65.00
MOTOROLA EXTRA FLEX $99.00

மாதம் $5.95 மட்டுமே

- * 12 மாதங்களுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்
- * Pagerஐ கொள்முதல் செய்ய வேண்டும்
- * 3மாத குத்தகையும் உண்டு(ஆரம்பத்தில்)
- * ஸ்காபரோவில் கிளைகளும் உண்டு

விபரங்களுக்கு : Raj ☎: (416) 745-2378

## சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்

TV, VIDEO, MICROWAVE OVEN, REMOTE CONTROL, AMPLIFIER

நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

(23 வருட அனுபவம்.)

கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)

TEL: 438-9134



## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer

தொடர்பு - கதிர்

☎: (416) 750-8118

2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON
SCARBOROUGH

## Tea Time

24 Hours Coffee, Tea, Donuts & Our Foods

Kipling / Steeles சந்திப்பில் தமிழர் நிர்வாகத்தில் மேல்நாட்டு உணவு வகைகளுடன் எம்நாட்டு உணவு வகைகளும் 24 மணிநேரமும் பரிமாறப்படுகின்றது.

Special - Tea Time

String Hoppers -100
$8.49 (சொதி, சம்பலுடன்)

☎: (416) 745-0514

5010 Steeles Ave. W. Unit #4

## TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும்

PL. CALL: 755-8034

## TUITION

PRIVATE TUITION IN CHEMISTRY TO GRADE 11 - GRADE 13 BY QUALIFIED AN EXPERIENCED TEACHER

☎: (416) 741-0112

## PRIVATE TUITION

PRIVATE TUITION (UPTO OAC) MATH, CALCULUS & CHEMISTRY

BY AN EXPERIENCED TEACHER

☎: (416) 447-6860

## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

## RAAJ WATCH WORK

சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாவனம்.

NATHAN

☎: (416) 265-5580

2885 LAWRENCE AVE. EAST
BRIMLY/ LAWRENCE
(Close to Biway)

## சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.


சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் ஐயர்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (4) - விஜே குலத்துங்கம்



"இசையால் வசமாகா இதயம் எது" என்று கூறுவார்கள். இசை மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தது என்பது யாவரும் அறிந்த உண்மை. தற்போது பல விஞ்ஞான ஆராய்ச்சிகள் இதையொட்டிய பல சுவாரசியமான தகவல்களை நமக்கு தந்துள்ளன. இசை என்பது மொழிகளுக்கு அப்பாற்பட்டது. ஹிந்திப் பாடல்களை எங்களுக்கு விளங்காவிட்டாலும், அதன் இசைக்காக இரசிக்கின்றோம். நாதஸ்வர இசையை அதில் மொழி சொற்கள் இல்லாவிட்டாலும் இரசிக்கின்றோம்.

கடந்த காலங்களில் செய்த ஆராய்ச்சிகள் இசைஞானம் நாம் பிறக்கும் பொழுதே எங்களுடன் தோன்றுகின்றதென்பதைக் கண்டுள்ளார்கள். பிறந்த குழந்தைகள் வயது வந்தோரைப் போலவே இசையின் வடிவத்தை புரிந்து கொள்ளக் கூடியனவாக உள்ளன. நல்ல இசையையும் மகிழ்ச்சி தராத இசையையும் பிரித்தறியக் கூடியதாக உள்ளன. பல்வேறு இன, மொழிகளைச் சேர்ந்த 4 மாதக் குழந்தைகளில் செய்யப்பட்ட பரிசோதனைகளின் முடிவின்படி, குழந்தைகள் இசையின் ஏற்ற இறக்கங்களையும், தாள லயங்கள் - *Rhythm* ஆகியவற்றையும் புரிந்து கொள்ளக் கூடியவை எனக் கண்டுள்ளார்கள். *Toronto* பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த *Sandra Trehum* என்ற பேராசிரியர் குழந்தைகளுக்கு பேச்சுவல்லமை எவ்வளவு தூரம் இயற்கையாக அமைந்துள்ளதோ அதேபோல் இசைஞானமும் உள்ளதென கூறியுள்ளார். *Music is a Pre -Language* அதாவது மொழியை கற்றுக் கொள்ளமுதல் இசையையே கற்றுக் கொள்கின்றார்கள். எந்த இனக் குழந்தையென்றாலும் அழுகை ஒலியும், ராகமும் ஒன்றாக இருக்கும். அவர்களது வெவ்வேறு தேவைகளையும், உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும் ஏற்றவாறு குறிப்பிட்ட இசையில், ராகத்தில் அழுகை ஒலி எழுப்புவார்கள்.

இந்த வெவ்வேறு அழுகைகளை ஒலிப்பதிவு செய்து, பின்னர் அழுகை ஒலி எழுப்பும் பொழுது அவற்றை ஒப்பிட்டு பார்த்து, குழந்தைகளின் தேவையை அறியலாம்.

*California* பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த *Gordon Shaw* என்பவரின் கருத்துப்படி மூளையின் *Neural Path-* உணர்ச்சி ஓட்டப்பாதையும், இசையின் வடிவமும் ஒத்ததாக உள்ளது. இவர் ஆனந்தமான நிலையிலுள்ள ஒருவரின் *Neural Path*ன் அளவுகளைக் கொண்ட ஒரு வரைபடத்தை வரைந்து அந்த வரைபடத்துக் கேற்றவாறு இசைக் குறியீடுகளைக் கொடுத்து, அதற்கு ஏற்ப ஒரு இசையைத் தயாரித்தபோது ஒரு இனிமையான இராகம் பிறந்தது. (திரைப்பட இசையமைப்பாளர்கள் இந்த முறையை பின்பற்றிப் பார்க்கலாம!) இப்படியமைக்கப்பட்ட இசைவடிவங்களை *Internet* லுள்ள ஒரு *Web Page*ல் நீங்களும் கூட கேட்டு மகிழலாம்.

எனவே மூளையின் தொழிற்பாடும் இசையின் வடிவமும் ஒத்ததாக இருப்பதால், இசை மூளையின் தொழிற்பாட்டை மேம்படச் செய்கின்றது என்பதற்கு விஞ்ஞான பூர்வமான சான்றுகள் கிடைத்துள்ளன. *Gordon Shaw*வின் கருத்துப்படி சிறு பிள்ளைகளுக்கு இசைப்பயிற்சியை கொடுப்பதன் மூலம் அவர்களின் மூளை வளர்ச்சியையும், விருத்தியையும் அதிகரிக்கலாம். இவர் செய்த இன்னொரு பரிசோதனையில் சில மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, ஒரு பகுதிக்கு *Mozart* ன் *Classical* இசையைக் கேட்கும்படி செய்து, பின்னர் அவர்களுக்கு கணக்குப் பரீட்சையொன்று கொடுத்தார். மற்றைய குழுவுக்கு இசை போடப்படாமல் அதே கணக்குப் பரீட்சையைக் கொடுத்தார். இசையைக் கேட்ட குழு மற்றைய குழுவைவிட 43% அதிகமான புள்ளிகளைப் பெற்றது.

ஐந்து அல்லது ஆறு வயது வரை பிள்ளைகளின் மூளை மிகவும் *Flexible* ஆக எதற்கும் இசைந்து கொடுக்கக் கூடியதாக இருக்கும். எனவே ஆரம்ப காலத்தில் இசைமூலம் மூளையை விருத்தி செய்து, பிற்காலத்தில் புத்தி கூர்மையுடையவராக்கலாம். இதனாலேயே சிறு வகுப்புகளில் கட்டாயமாக இசைவகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இதைவிட வயது வந்தவர்களுக்குக் கூட, இசையானது அவர்களின் நரம்புகளின் உணர்வை சாந்தமடையப் பண்ணுகிறது. விருந்து கேளிக்கைகளின் போது, பாட்டுக்கள் பாடி எங்களை நாமே மகிழ்விக்கின்றோம். இதேபோலத்தான் எந்த மதங்களாக இருந்தாலும் சரி இந்துக் கோயில்களில் தேவார பஜனைகளும், கிறிஸ்தவ தேவாலயங்களில் *Gospel Songs* ஐ பாடுவதன் மூலமும் மனதை சாந்தியடையச் செய்கின்றோம். இதேபோல நாதஸ்வர இசையும், *Piano* வாத்தியக் கருவியும் இதையொத்த விளைவுகளைக் கொடுக்கின்றது.

கனடா போன்ற மேற்கத்திய நாடுகளில் அலுவலகங்கள் காரியாலயங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சிறிதாக இசை எப்போதும் ஒலித்துக் கொண்டிருப்பதற்கும் இதுவே காரணம். இசையினால் ஒவ்வொருவருடைய வேலைத்திறனும் அதிகரிக்கின்றது. இதை ஏன் தான் எமது தாய்நாட்டில் கடைப்பிடிப்பது இல்லையென தெரியவில்லை.



புதிய நிர்வாகத்தின் கீழ்

**Markham / Sheppard** பகுதியில்

**NEW SPICELAND**

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 81



**இடமிருந்து - வலம்**

1. நெற்றிக்கண்ணை காட்டினாலும் குற்றம் குற்றமே என்றவர்
3. யானை (வல - இட)
4. விபீடணனின் தங்கை
6. இந்திய சுதந்திர போராட்டத்தின் போது எல்லோர் வாயிலும் ஒலித்தது.
10. இசை (வல - இட)
11. திக்கு (வழி)
12. சிங்கம்
14. இருக்கை (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. பூங்காவனம்
2. பாம்பின் பகைவன்
3. இறுதி
4. உண் (கீழ் - மேல்)
5. ஒத்துக்கொள்ளல் (கீழ் - மேல்)
7. இதற்கு மூன்று கண் உண்டு
8. இதை பூவாலும் செய்யலாம் பொன்னினாலும் செய்யலாம் (கீழ்- மேல்)
9. உபாயம்
13. மடம் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் February 25, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: **P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | ர் | வா | ச | ர் | | ணை | வீ |
| ப் | | டி | | வ | | | ர |
| ப | டை | க் | க | ல | ம் | | ப் |
| ர | | கை | | பு | | | ப |
| வு | | | | | ரு | ப | ன் |
| | | ப | | ம் | | ன் | |
| ளை | | ட் | | ட | | னா | க |
| மு | ட் | டு | க் | க | ட் | டை | |

**#80இல் வெற்றி பெற்றோர்**

1) MRS. P. PUVANESPARAN, NORTHYORK
2) MRS. S. NAGALINGAM, DONMILLS


நியூ ஸ்பைஸ்லாண்ட்

5800 Sheppard Ave. E.

Unit#16 Scarborough, Ont.

**YASO DESIGNS**

*Architectural & Engineering Services (15 Year Prof. Experience)*

வீட்டின் பகுதியில். வியாபார ஸ்தாபனங்கள், ரெஸ்ரோறன்ற் போன்றவற்றை அமைப்பதற்கும், ஏதாவது மாற்றங்கள் செய்வதற்கும், படங்கள் வரைந்து அரசாங்க அனுமதி பெற்றுத் தருவதிலும், கட்டிடங்கள் திட்டமிடலும் இவைபோன்ற மற்ற சேவைகளிற்கும் தொடர்புகொள்ளுங்கள்

யசோ - Tel: (416) **283-3841** Pager: **758-8671**


## கனடாவில் சிறந்த சாரதியாவது எப்படி? (3ம் பக்க தொடர்ச்சி)

முதற்கட்டத்திற்கான எழுத்துப் பரீட்சை சித்தியடைந்ததும் ஒரு வருடத்தின் பின்னரே வீதிப் பரீட்சைக்கு *(Road Test)* போகமுடியும், ஆனால் வேறு நாட்டு சாரதிப்பத்திரம் இருந்தால் (இரண்டு வருட அனுபவமுள்ளவர்களாக) அவர்கள் உடனடியாக *Level 1 or G1* அல்லது *Level 2 or G2* வீதிப்பரீட்சைக்கு போக முடியும்.


வேறுநாட்டு சாரதிப்பத்திரம் இல்லாதவர்கள் இந்த மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பயிற்சிச்சாலையில் *(Driving School)* பயிற்சிபெற்றால் அதனூடாக அவர்கள் பெறும் சான்றிதழுடன் *(Driving School Certficate)* சுமார் 8 மாதங்களில் முதலாவது வீதிப்பரீட்சைக்கு அமரமுடியும். ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ள முதலில் எந்த பயிற்சிசாலை அங்கீகரிக்கப்பட்டதென்பதை *Ministry of Transportation* இனூடாக அறிந்து கொள்ளுங்கள்.

முதலாவது வீதிப்பரீட்சை சுமார் 15 நிமிடங்கள் நடக்கலாம். இந்த வீதிப்பரீட்சையில் தேறினால் இந்த நாட்டில் எந்த நேரத்திலும் எந்த சாலையிலும் வாகனம் ஓட்ட முடியும். ஆனால் அதில் சில கட்டுப்பாடுகளுள்ளன அவையாவன வாகனம் ஓட்டும்போது 1. மது அருந்தியிருக்கக்கூடாது *(0% Alcohol)* 2. வாகனத்தில் அதிகப்படியானவர்களை ஏற்றக்கூடாது. *(Not Over crowded)* இருப்பவர்கள் அனைவரும் சீட் பெல்ட் *(Seat Belt)* அணிந்திருக்க வேண்டும். வீதிப்பரீட்சை சித்தியடையாவிட்டால் மீண்டும் 10 நாட்களின் பின்னர் தோற்றமுடியும் முதற்கட்ட *(Level 1 or G1)* சித்தியடைந்தவர்கள் *Level 2 or G2* சாரதிப் பத்திரத்தைப் பெறுபவர்கள் அதன் பின்னர், அடுத்த கட்ட வீதிப் பரீட்சைக்கு ஒரு வருடத்தின் பின்னரே தோன்ற முடியும். ஆனால் 5 வருடங்களுக்குள் முன்பாக தோன்றி வீதிப்பரீட்சையில் சித்தியடைந்து விட வேண்டும். இந்தக் குறிப்பிட்ட காலத்தில் சிந்தியடையாவிட்டால்..... (தொடரும்)

மேலதிக தொடர்புகளுக்கு - *PARAM SELVA, B.Sc.*
*Driving Instructor (Bestway Driving School)*
***TEL: (416) 431-3763*** ***PAGER (416) 374-9724***

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing







Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] 285-4998

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)

## கனடாவில் சிறந்த சாரதியாவது எப்படி? *(1)*



அன்பார்ந்த தமிழ்மக்களே! உங்களுடன் தொடர்புகொள்ள அரிய சந்தர்ப்பத்தைக் கொடுத்த "விளம்பரம்" பத்திரிகை நிறுவனத்திற்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் ஒன்ராறியோ மாநிலத்தில் புதிய சட்டத்தின் கீழ் எப்படி சாரதிப்பத்திரம் பெறுவது-: நீங்கள் பதினாறு (16) வயதானவராக இருக்க வேண்டும். எழுத்துப்பரீட்சைக்கு போகும்முன் சாரதிக்கான கைநூலினூடாக (Drivers Handbook) இந்த மாநிலத்தின் குறியீடுகளையும் (Signs), வீதிச் சட்டங்களையும் (Traffic Laws) அறிந்து கொண்டிருக்க வேண்டும்.

எழுத்துப் பரீட்சைக்கு (Written Test)——$10.00
முதலாவது வீதிப் பரீட்சை (Leve 1 or G1) ——$40.00
பதிவுச் செலவு 5 வருடத்திற்கு—$50.00
இரண்டாவது வீதிப்பரீட்சை (Level 2 or G2]——$75.00
[தற்போதுள்ள விலைகள் எப்போதும் மாறலாம்?]

(2ம் பக்கம்)


*We are entering 7 th year service in Scarborough.*



**Better Work ...**
**Less Money**

N.T.E Auto Inc.
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.


**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஒட்டோ இங்.

AUTO INC.
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN






குடும்ப பல்வைத்தியர்
**Family Dentist**
**Dr. Mahin Pouyan**

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் **Dr. Mahin Pouyan** ஐ நாடுங்கள்

☎ (416) **225-5522**
* ஞாயிற்றுக் கிழமைகளிலும்

263 Finch Ave. E. (Finch & Bayview), North York, Ont. M2N 4S1

Pillayar Traders

**SRILANKAN . EAST & WEST INDIAN**
GROCERIES & TEXTTILES
**3630 LAWRENCE AV. E., SCARBORO**
☎ : 438-7746


**விஷேச போட்டி இல. 71**

தற்போது நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்கில் பங்குபற்றும் நாடுகளில் 12ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| னா | சீ | து | ந் | லா | ர் | த | நெ |
| ன் | ட | வீ | சு | ஜே | ர் | ம | னி |
| பா | ன் | அ | ர் | ஒ | மா | ர் | ப |
| ப் | ட | மெ | மா | ஸ் | ன் | ரா | பி |
| ஜ | ண் | ரி | ன் | ரி | ரு | பே | லா |
| வே | ல | கா | டெ | யா | ஸ் | ர | ந் |
| ர் | சு | வி | ற் | ச | லா | ந் | து |
| நோ | லி | தா | த் | இ | டா | ன | க |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை MARCH 11, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 70ன் விடைகள்**
1. நீள அளவைக் குறிக்கும் பிரித்தானிய அலகுகள் அங்குலம், அடி, யார், மைல்
2. **நீள அளவைக்குறிக்கும் சர்வதேச அலகு மில்லிமீற்றர், சென்ரி மீற்றர், மீற்றர், கிலோ மீற்றர்**

பரிசு பெற்றோர்:
1) தங்கேஸ்வரி K. Toronto
2) நிர்மலா குணநாதன், Willowdale


**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)
**விதிகள்:**ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

# ஆரோக்கிய வாழ்வு (4) - N. செல்வசோதி



## தனுராசனம் (BOW)

இந்த ஆசன நிலையில் உடம்பு வில் (bow) போன்று அமைந்திருக்கும் இதனால் இதனை "வில்லாசனம்" என்றும் அழைப்பார்கள். இதன் பலன்கள் அளப் பெரியது. இதனை ஒரு தடவைக்கு 30 வினாடிகளாக 3 முறை செய்யவும்.



*செய்முறை* 1. குப்புறமாக உடல் மீது படுக்கவேண்டும். 2. கைகள் இரண்டினாலும் கணுக்கால்களைப் பிடித்து கால்களை விரித்தபடி தலையைத் தூக்க வேண்டும். அதன் பின் இடமும் வலமும் மாறி மாறி அசைத்தல் வேண்டும்.
4. அடிவயிறு மட்டும் தரையில் பட வேண்டும்.

*பலன்கள்* 1. மலச்சிக்கல் மறைந்து விடுகிறது. 2. சமிபாடு சக்தி அதிகரிக்கச் செய்கிறது. 3. வாய்வு சம்மந்தமான பிரச்சினைகள் நீங்குகிறது. 4. இளமைப் பொலிவை அதிகரிக்கச் செய்கிறது. 5. சிறுநீரகத்தைச் சுறுசுறுப்படையச் செய்கிறது. 6. கல்லீரல்களைச் சிறப்புடன் செயல்பட வைப்பதுடன் வயிற்றுக் கோளாறுகளை நீக்குகிறது.

*உறக்கமின்மை (தடுக்கும் வழிகள்)*

இந்தப் பிரச்சினை பலருக்கு பல காரணங்களால் ஏற்படுகிறது. தூக்கம் வராத காரணத்தால் தூக்கத்திற்கு என்று மது வகைகளைக் குடிப்பது, தூக்க மாத்திரைகள் சாப்பிடுவது இதனால் உடல் நலம் குன்றி மூளை உறுப்புகள், நரம்புகள் பாதிக்கப்பட்டு மனநோயாளியாகக் கூட உருவாக முடியும். தூக்கமின்மை என்பது கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாலும் மனதில் பலவாறு எண்ணங்கள் மனதில் ஏற்படும் டென்சன், பொருளாதார, குடும்ப பிரச்சினைகள் வந்த நோய் பற்றி சதா நினைத்தபடி இருப்பது. இதனால் கண்களை மூடினாலும் விழிப்பு நிலைதான் இருக்கும். இப்படிப்பட்ட நினைவுகள் அலைமோதும் போது தூங்கவே முடியாது.

ஒரு மனிதனுக்கு ஆழ்ந்த தூக்கம்தான் அவனது மூளையும் மனதும் முறைப்படி செயல்பட வைக்கிறது. அவனது உடல் உழைப்பு மன உழைப்பு என்பனவற்றிற்கு ஏற்பவே உறக்கத்தின் தன்மை அமையும். பொதுவாக ஒரு மனிதனின் உறக்கம் 6 முதல் 8 மணி நேரம் வரை இருக்கலாம். சிலர் பால் குடித்துவிட்டுத் தூங்கப் போவார்கள். இதனால் தூக்கம் தடைப்படும் அவர்கள் பாலுடன் தேன் கலந்து குடித்தால் தூக்கம் இனிமையாக அமையும். இரவில் தாமதமாக உணவருந்துபவர்களுக்குத் தூக்கம் எளிதில் வராது. அதே போல் அதிக அளவு சாப்பிடக் கூடாது. தூங்குவதற்கு மூன்று மணிநேரம் முன்பே இரவு உணவை முடித்துவிடவேண்டும்.

தூக்கம் இல்லாமல்த் தவிப்பவர்கள் இரவில் தலைக்கு தண்ணீர் ஊற்றாமல் குளிர்ந்த நீரில் குளிப்பதுடன் பின் நிதான அளவு உணவு உட்கொள்வதுடன் 2 முதல் 3 மணிநேரம் கழித்து தூங்கப்போக வேண்டும். ஆடைகள் உடம்புடன் இறுக்கமாயில்லாது வலப் புறம் அல்லது இடப்புறம் படுத்துத் தூங்க வேண்டும் நிமிர்ந்த நிலையில் தூக்கம் வராது சிந்தனைகள் வரும். அறையில் மெல்லிய வெளிச்சத்தையும், இனிமையான இசையையும் பயன்படுத்தலாம் அல்லது நல்ல புத்தகங்களையும் படிக்கலாம். (நன்றி யோகக்கலை)


## யோகாசன வகுப்புக்கள்

அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறு தோறும் காலை MARKHAM / ELLESMERE இற்கு அருகாமையில் அமைந்திருக்கும் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப்படுகின்றது. மேலதிக தொடர்புகளுக்கு சத்தி : **291-5853**



# Neelam SILK

**வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை**

# நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான

புதிய வருகைகள்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)



*7 DAYS Open* நகரின் மத்தியில்

# GREAT ONE TEXT



1368 QUEEN ST. WEST (QUEEN & BROCK)
TEL: (416) 588-7989

- சிறுவர்களுக்கான உடைகள்
- ஆண்கள், பெண்களுக்கான உடைகள்
- **எக்ஸ்பிரஸ் பணமாற்று சேவை**
- U.S.A, LONDON, SINGAPORE பிடவைகள்
- 3வது வருடத்தில் கால்பதிக்கும் **GREAT ONE TEXT**

**EVERY WEEK ARRIVAL**



# YARLCAN
## STEAM CLEANING





Tel: (416) 724-9085 / Pager : 600 0335 / Cell: 315 0332


*ஆன்மீகச் சிந்தனை* தர்மத்துள் சிறந்த தர்மம் உள்ளத்தில் இருப்பதையே வாயால் சொல். தீய வார்த்தைகளைத் தவிர். பிறரைத் தூற்றாதே. நல்ல, இனிய வார்த்தையும் ஒரு புண்ணியச் செயலே. தர்மத்துள்ளெல்லாம் சிறந்த தர்மம், மனிதனுடைய உள்ளத்தினின்று வெளியாகி, நோயாளியின் மனப் பிணியைப் மாற்றுவதற்காகப் பேசப்படும் மிருதுவான மொழிகளே ஆகும். - முகமது நபி

## நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் (4) -M. உமா

**RED MEATS "LITTLE GOES A LONG WAY"**

பொதுவாக Red Meats எனப்படுவது மாடு, ஆடு, பன்றி இறைச்சி வகைகள் ஆகும். இந்த வகையான இறைச்சிகளில் உடலிற்கு அத்தியாவசியமான நல்ல வகை புரதம் (High Quality Protein) நிறைந்து காணப்படுகிறது. அத்துடன் இரும்புச்சத்தும் (Fe) நிறைந்து இருக்கிறது. இவ் இரும்புச்சத்தானது இலகுவாக உடலில் உறிஞ்சக்கூடிய வகையில் ("Heme" Form) இருக்கிறது. இது குருதியை (Blood) உருவாக்குவதற்கு முக்கிய பங்கை வகிக்கிறது. எனவே இந்த இறைச்சி வகைகளை நாம் அளவாக உட்கொண்டு அதன் நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இந்த வகை இறைச்சியில் நிரம்பிய கொழுப்பமிலமும் (Saturated, Fatty Acids), Cholesterol உம் நிறைந்து காணப்படுகிறது. இது உடலிற்கு தீங்கை விளைவிக்கவல்லது.

Red Meatsஐ அளவிற்கு அதிகமாக உண்பதால் ஏற்படும் நோய்கள்.

* இதயவியாதிகள் (Heart Disease)
  நிரம்பிய கொழுப்பமிலம் இரத்தத்தில் Cholesterol இன் அளவைக் கூட்டி இதயவியாதிகளிற்கு வழிவகுக்கிறது.

* பெருங்குடல் புற்றுநோய் (Colone Cancer)
  ஆராய்ச்சிகள் கூறுகின்றது இவ்வகையான இறைச்சிகளை அதிகமாக உண்பவர்களில் பலரிற்கு பெருங்குடல் புற்றுநோய் இருப்பதாக.

* எலும்பு அரிப்பு நோய் (Osteo Porosis)
  அதிகளவு புரதம் சிறுநீரில் கல்சியத்தின் (Ca) அகற்றலை தூண்டுகிறது. இதனால் கல்சியம் குறைபாடு ஏற்பட்டு எலும்பு அரிப்பு நோய் உருவாகிறது.

அறிவுரைகள்

* Red Meats எடுக்கும் அளவை இயலுமான அளவிற்கு குறைப்பது மிக நன்மையானது.
* Red Meatsஐ சமைக்கும் போது கண்ணிற்கு தெரிந்த கொழுப்பு படைகளை இயலுமான அளவிற்கு அகற்றவும்.
* Red Meats ஐ நன்றாக சமைக்கவும். (Cook Throughly) ஏனெனில் கண்ணிற்கு தெரியாது, உடலிற்கு தீங்கை விளைவிக்கவல்ல நுண்ணங்கிகள் (E. Coli & Parasites) இவ் இறைச்சியில் காணப்படுகிறது.
* அதிகளவு Hamburgers போன்ற உணவுகளை (Processed Meat) உண்பதை குறையுங்கள். இவற்றில் கொழுப்பு அதிகமாக காணப்படுகிறது.

"Backyard Barbecue: The Concerns Centre on the Saturated Fat" (தொடரும்..... )

## ஆதிகால விஞ்ஞானிகள் (2) (8ம் பக்க தொடர்ச்சி)

*பகீரதன் கங்கையை பூலோகத்திற்கு அழைத்து செல்லும் போது ஜானு முனிவரின் தோட்டத்துக் கூடாக அடைத்துச் செல்ல நேரிட்டது. அப்போது அவரின் தோட்டம் நீரினால் மூழ்கடிக்கப்பட்டது. இதனால் கோபமுற்ற ஜானு முனிவர் கங்கையை முழுதாக குடித்து அதை முழுதாக அழித்துவிட்டார். இதை கண்ட பகீரதன் கவலையுற்று ஜானு முனிவரை நோக்கி தவம் செய்தான். பகீரதனின் தவத்தை மெச்சி ஜானு முனிவர் கங்கையை தனது காதினூடாக சிறுகச் சிறுக வெளியே செல்ல அனுமதித்தார்.*

*இப்படியான கர்ணபரம்பரைக் கதையை ஏன் ஆதிகால இந்தியர்கள் உருவாக்கினார்கள்? இக்கதையில் ஏதாவது இரகசியம் புதைந்து இருக்கின்றதா? இக்கதை ஆதி காலத்தில் நடைபெற்ற நதிகளின் திசை திருப்பம் பற்றியதா? ஆம் இப்போது எல்லாம் விளங்கிவிட்டது. நதிகளின் வேகத்தை அல்லது நீர்ப்பாசன வாய்க்கால்களின் வேகத்தை குறைப்பதற்கு அவற்றின் படுக்கைகளின் சரிவு (bed slope) குறைக்கப்படுகின்றன. அதாவது ஆறுகள் அல்லது நீர்ப்பாசன வாய்க்கால்கள் மலைச்சரிவுக்கு செங்குத்தாக அதாவது சமஉயரக் கோடுகளின் வழியாக (along the contour ) அமைக்கப்பட்ட நீர் ஓட்டத்தின் வேகம் குறைக்கப்படுகின்றது.*

*மேலும் ஒருமுறை சிவனின் உருவப்படத்தை கண்ணோட்டம் விட்டேன். இப்போது எல்லாமே புரிந்து விட்டது. சிவனின் தலை இப்போது பாரிய மலையாகவும் அவரின் சடை அதாவது கொண்டை மலையைச் சுற்றிச் சுற்றிவரும் ஆறாகவும் தோற்றியது. தற்காலத்தில் மலைமேலே ஏறுவதற்கோ அன்றி உச்சியில் இருந்தி இறங்குவதற்கோ அமைக்கப்படும் பாதை எப்படி மலையைச் சுற்றி வருகின்றதோ அதேபோலத்தான் ஆற்றின் வேகத்தை குறைப்பதற்கு இப்படியான கொண்டை போன்ற அமைப்புக்கள் முக்கியமாக அமைகின்றது.*

*மீண்டும் சிவனின் உருவை உற்று நோக்கினேன் எனது கருதுகோளை ஆதரிப்பதுபோல் சிவனின் சடையில் செருகி நின்ற வளருபிறை பறை சாற்றியது. மேற்கொண்டு நான் கங்கை நதியின் கதையினை ஆராய்தேன். பகீரதன் கங்கையை பூலோகத்தில் வழிநடத்தி வரும் போது அது ஜானு முனிவரின் தோட்டத்தை நீரில் மூழ்கடித்ததாகவும் ஜானு முனிவர் கோபத்தில் கங்கை முழுவதையும் குடித்து அழித்ததாகவும் கூறப்படுகின்றது. மீண்டும் குழப்பமாக இருந்தது. நதியை எதற்காக திசை திருப்புகின்றார்கள்? நீரைத்தேக்கி தகாத காலங்களில் நீர்ப்பாசனம் செய்வதற்கு என்பது யாவருக்கும் தெரிந்தவிடயம்.*

*கதையின் முற்பகுதி நதியை திசைதிருப்புவது என்றால் கதையின் பிற்பகுதி நீர்த்தேக்கம் அமைப்பதைக் கூறுகின்றதா? நான் விவசாய விஞ்ஞானியாக அதுவும் குறிப்பாக நீரியல் பிரிவின் வேலை செய்தவன். நீர்த் தேக்கங்களின் அமைப்பு அவற்றின் தன்மைகள் எல்லாமே நன்கு தெரிந்தவை. இப்போ எனக்கு எல்லாமே புரியத் தொடங்கி விட்டது. ஜானு முனிவர் கங்கையை குடித்தது என்பது ஜானு முனிவரின் தோட்டம் பள்ளத்தரை என்பதுவும் அங்கு நீர் தேக்கி வைக்கப்பட்டது என்பதுவும் பின்னர் முனிவரின் காதின் ஊடாக நீர் சிறுகச் சிறுக வெளியேற அனுமதிக்கப்பட்டது என்பது குளத்தில் இருந்து அல்லது நீர்த்தேக்கத்திலிருந்த நீர்பாசனத்திற்கு நீர் வெளியேற்றப்பட்டதை கூறுகின்றது. குளத்திலிருந்த நீர் வெளியேற்ற பாவிக்கப்படும் அமைப்பை (Sluice) மடை என அழைக்கின்றார்கள்.*

*4000 ஆண்டுகள் பழமை வாய்ந்த Sluice அமைப்பு ஒன்று மதுறுஓயா ஆற்றுப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்டள்ளது. பல ஆயிரக்கணக்கான ஆண்டகளுக்கு முன்னர் இலங்கை இந்திய நாடுகளில் நீர் தேக்கங்கள் அமைக்க, நதிகளை திசை திருப்ப தேவையான தொழில் நுட்பம் இருந்தது என்பதற்கு தேவையான சான்றுகள் இருக்கின்றன. தங்களின் தொழில் நுட்பங்களை கல்வி இல்லாதவர்களுக்கு விளங்கக்கூடிய முறையில் இயற்றப்பட்ட கதையே கங்கை நதியின் கதையாகும். இக்கதையில் நீர் சுற்றி வருவதை கொண்டையாகவும் முனிவர் நீரைக்குடிக்க வாயும் (குளம்) பின்னர் நீர்ப்பாசனம் செய்ய பாவிக்கப்படும் Sluice என்ற அமைப்பை காதாகவும் உவமைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் கண்களும் முக்கும் சேர்த்துக் கொள்ளப்பட்டால் ஒரு மனிதத் தலை தோன்றுகின்றதல்லவா அந்த மனிதத் தலையில் (மலையில்) சந்திரனும் (வளர்பிறையும்) கங்கை நதியும் சேர்த்து தான் அந்த கலண்டரில் உள்ள உருவம் அமைக்கப்பட்டு சிவபெருமானாக வணங்கப்படுகின்றது என்பது தெட்டத் தெளிவு ஆதிகால மக்கள் தங்கள் தொழிநுட்பங்களை கதைகளாக எவரும் விளங்கக் கூடிய வகையில் எவ்வளவு திறமையாக அமைத்துள்ளனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.*

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**

"தமிழில் இலவச ஆலோசனை"

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்

ரவி நடராஜா

※ தகுந்த ஆலோசனை
※ சட்ட உரிமைகள்
※ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
※ உரிய நஷ்டஈடு ※ மற்றைய இழப்பீடு
※ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும்,

அறிவுரைகளுமதமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 231-5134
FAX: (416) 231-7433

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.




குடிவரவு சட்டம் IMMIGRATION LAW

* அகதி நிலை விண்ணப்பம்
* மேன்முறையீடு
* ஸ்பொன்சர்

குற்றவியல் சட்டம் CRIMINAL LAW
விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS

ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு



தொடர்பு கொள்ளுங்கள்....> எஸ்.கே. தீசன் (416) 631-6322

**IMMIGRATION CONSULTANT**
Christina Staden, M.A.
Member of the Association of Immigration Counsel of Canada
18 years experience
Free assessment, LOW COST,
money back guarantee*
Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307
9AM.-9P.M.

# பெருமை கொள்ளாதே

-மணி-

முயல் வேகமாக ஓடும் என்பது எல்லோருக்கும் தெரியும். இது முயலுக்கும் தெரியும். தான் வேகமாக ஓடுகிறேன் என்று ஒரு பெருமையுடன் முயல் வாழ்ந்து வந்தது. இந்த முயல் ஒருநாள் ஒரு ஆமையைச் சந்தித்தது. அத்துடன் அந்த ஆமையுடன் சற்று நேரம் சம்பாசனையும் செய்தது.

முயல் இறுதியில் ஆமையைத் தன்னுடன் ஓட்டப் போட்டிக்கு அழைத்தது. ஆமைக்கோ தர்ம சங்கடமாகப் போய் விட்டது. என்னடா ஓட்டத்திலேயே மிகப்பெரிய வீரரான முயலர் என்னை ஓட்டப் பந்தயத்துக்குக் கேட்கிறாரே எனச் சற்று நேரம் சிந்தித்தது. நான் இவருடன் ஓடித் தோற்கத்தான் போகின்றேன். ஆனாலும் இவர் இறுமாப்பு கொண்டுள்ளார். இந்நேரம் நான் இல்லை எனக் கூறினால் என்னை இழக்காரமாக நினைப்பார் என எண்ணிய ஆமை தான் ஓட்டப் பந்தயத்திற்குத் தயார் என்றது.

அதன்பின் அவர்கள் இருவரும் ஒரு நாளைக்குறித்து ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்தனர். ஓட வேண்டிய தூரமும் நிர்ணயிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஓட்டப் போட்டியும் ஆரம்பமானது. முயலோ வெகு வேகமாக ஓடியது. கிட்டத்தட்ட அவர்கள் ஓடி முடிக்க வேண்டிய எல்லைக்குக் கிட்ட வந்து சேர்ந்து விட்டது. அதன்பின் திரும்பிப்பார்த்தது. கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஆமையைக் காணவில்லை. ஆமை வர நேரமாகும் என எண்ணிய முயலர் ஓடி வந்த களைப்புத் தீர ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்தார்.

அப்படி உட்கார்ந்தவர், ஆமையார் வர நேரமாகும் அதற்கிடையில் நான் ஒரு சிறு நித்திரையே கொண்டவிட்டு ஓடலாம் என எண்ணிக் கண்ணயர்ந்தார். ஆனால் ஆமையாரோ தனது வேகத்திலேயே வந்து முயலரைக் கடந்து சென்று விட்டார்.

சற்று நேரத்தில் கண் விழித்த முயலர் அங்கும் இங்கும் பார்த்தார். திகைப்பில் ஆழ்ந்தார். ஏனெனில் அவர்களின் ஓட்டப் போட்டிக்கென வைத்த எல்லைக் கோட்டை நெருங்கிக் கொண்டிருந்தார் ஆமையார்.

முயலாரோ தான் எப்படியும் முந்திவிடுவேன் எனப் பாய்ந்தோடினார். ஆனால் அதற்கிடையில் ஆமையார் எல்லையைத் தாண்டி விட்டார். தான் தன்னைப் பெரிதாக நினைத்ததால் தோல்வியைத் தழுவிக் கொண்டேன் என நினைத்த முயலர் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நாணிக் குறுகிக் கொண்டு ஆமையாருடன் கதைக்காமல் மெதுவாக நழுவி விட்டார்.

ஆனால் ஆமையாருக்கோ பெருமை பிடிபடவில்லை. தான்முயலாரை ஓட்டப் போட்டியில் வென்று விட்டேன் என்ற இறுமாப்புடன் திரிந்தார். இந்நாளில் ஓர் நாள் இவர் ஓர் நத்தையாரைச் சந்தித்தார். நத்தையாருக்கும் ஆமையாருக்கும் இடையில் சில உரையாடல்கள் நடந்தன. இந்த உரையாடலின் முடிவின் போது நத்தையாரைத தன்னுடன் ஓட்டப் போட்டிக்கு அழைத்தார் ஆமையார். நத்தையாருக்குத் தனது வேகம் தெரியும் தானே, ஆனாலும் ஓட்டப் போட்டிக்கு ஒப்புக் கொண்டார். நாளும் குறிக்கப்பட்டு இடமும் குறிக்கப்பட்டது.

நத்தையாரும் ஆமையாரும் ஓட்டப் போட்டிக்கான இடத்திற்கு வந்தனர். ஓட்டம் ஆரம்பமாகப் போகும் நேரம் நத்தையார் ஆமையாரின் முதுகில் அதாவது ஆமையாரின் ஓட்டிலே ஏறி அமர்ந்து கொண்டார். ஆமையார் திரும்பிப் பார்க்காமல் ஓடிக் கொண்டே இருந்தார்.

சற்றுத் தொலைத்தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்தார். நத்தையாரைக் கண்ணுக் கெட்டிய தூரத்திற் காணவில்லை. நத்தையார் வர எப்படியும் நேரமாகும் என எண்ணிய ஆமையார் ஓடிய களைப்பில் ஓய்வெடுக்க எண்ணினார். ஒரு மர நிழலில் சென்று ஓய்வெடுத்தார். ஓடிய களைப்பின் மிகுதியால் அவரும் கண்ணயர்ந்து விட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் முதுகிலே இருந்த நத்தாயார் இறங்கி எல்லைக் கோட்டிற்குக் கிட்டே வந்து விட்டார்.

சற்று நேரத்தால் கண்விழித்த ஆமையார், முயலார் முழித்தது போலவே அங்கேயும் இங்கேயும் பார்த்தார். நத்தையார் எல்லை கோட்டிற்குக் கிட்டே போய் விட்டதைக் கண்டார். எப்படியும் முந்தி விடலாம் என்ற ஆதங்கத்தில் விறுவிறுவெனப் புறப்பட்டார். ஆனால் அதற்கிடையில் நத்தையார் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிவிட்டார்.

நான் முயலாரை வென்றதுடன் இருந்திருக்கலாம். இப்பவும் பெருமை பேசப் போய்த் தோல்வியைத் தழுவிக் கொண்டேன் என எண்ணிய ஆமையார் வெட்கத்துடன் நத்தையாரப் பார்க்க மனமில்லாமல் தலையை உள்ளே இழுத்துக் கொண்டார்.

# நிதியும் மூலதனமும் (3)



**RRSPல் இருக்கும் பணத்தை பெருக்குவதற்கேற்ப சில வழிமுறைகளாவன:**

(1). Diversify / பரவலாக பணத்தை போட்டு வைத்தல் அதாவது சிறிதளவை Shares ல் சிறிதளவை குறித்தளவு வரவு இருக்கக்கூடிய மூலதனத்திலும் கடைசியாக மேல்நாட்டி EQuity லும் போட்டிருக்க வேண்டிம்.

(2) *Buy and Hold* - இதன் விளக்கம் வாங்கிவிட்டு முதல் தடைவயாக நிதிகுறையும் போது விற்பதல்ல, குறுகிய காலத்தில் நிதிகுறைந்தாலும் தொடர்ச்சியாக முதலிட (*invest*) வேண்டும்.

3. *Invest Regularly* அதாவது ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தொகையை உங்களுடைய நிதிக்கு மூலதனமாக இடவேண்டும். இதற்கு நீங்கள் உங்கள் வங்கிக் கணக்கிலிருந்த எடுக்கக் கூடியதாக ஏற்பாடு செய்வதே மிகச் சிறந்த முறையாகும்.

4. *Shop the Sale - Mutual Fund* மற்றைய பொருட்களை போல் விலை குறைந்து போவதுண்டு. ஆகவே Unit Price குறையும் போது கூடுதலாக வாங்கி வைப்பது சிறந்த முறையாகும்.

5. *Keep lour Perspective* - அதாவது T.S.E or Dow Jones எந்தளவிற்கு ஏறினாலோ அல்லது இறங்கினாலோ எந்தவித தாக்கமும் தற்போது இருக்காது. முன்பென்றால் சில தாக்கம் இருக்க சாத்தியமுண்டு. அதாவது தானாகவே திருத்தம் செய்யக்கூடிய (*Automatic Cooling Off*) வழிமுறைகள் இப்போது செய்முறையில் உள்ளன. இதனால் முன்பு நடந்ததுபோல் *Stock Market Crash* அல்லது பதட்டத்தில் விற்பதும் தவிர்க்கப்பட்டுள்ளது. (*Panic Sell*) இப்போ ஒரு பெரிய Exchange யின் பெறுமதி குறைந்த ரேநரத்தில் பாரதூரமாக குறைந்தால் அந்த Exchange தற்காலிகமாக வியாபாரத்தை நிறுத்திவிடும்.

6. *Be Honest* - உங்கள் RRSP மூலதனம் உங்களுக்கு மிகவும் விளங்கக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படி அல்லாவிடில் கேட்டறிதல் மிகமுக்கியம். விலைகள் கூடி குறைவதை பார்க்க பயமாக இருந்தால் விளக்கமுள்ளவர்களிடமிருந்த கேட்டு பயத்தை நீக்குவதே ஒரு வழியாகும். - *Jey Ahamparam* ☎: 498-4450 / 423 1718


## TUITION

9ம் வகுப்பிலிருந்து 13ம் வகுப்பு வரையான மாணவர்களிற்கு விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்கள் வீட்டில் வந்து கற்பிப்பதற்கு அனுபவமிக்கவரான Baskarஐ நாட வேண்டியவர்

பாஸ்கர் - **(416) 269-9683**


## கனடிய வருமான வரி

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட காலமாக, இந்த வருமான வரி கூடுவதையே அவதானிக்கலாம். விதிவிலக்குமில்லாமல் இல்லை. கனடாவிலுள்ள இரு அரசாங்கங்களும் அதாவது மாநில, மத்திய அரசுகள் தங்களது (Budget) வரவுசெலவுத் திட்டத்தினை வெளியிடும்போது இவ் வருமானவரி ஏற்ற இறக்கங்கள் தெரிய வரும். ஒவ்வொரு வருடமும் மத்தியா அரசு பெப்ரவரி மாதத்தில் தனது வரவுசெலவு திட்டதினை கொண்டுவரும் (இவ்வருடம் Feb. 24, 98 4:30 Pm) வெளிப்படுத்த உள்ளது. அதற்கு பிற்பாடாக மாநில அரசு தனது Budgetஐ வெளியிடும். -வருமானவரிப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கு வயது கட்டுப்பாடு கிடையாது.


## நியூ ராஜன் சலூன்

உங்களது அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில் புதியதோர் நிறுவனம்

* பெரியவர்களுக்கு $9.00
* சிறுவர்களுக்கு $7.00
* வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு



**Tuesday to Sunday 10:30Am - 7:30Pm**

**Pl. Call: Raja Tel: (416) 741-9198**

**Pager (416) 739-2393**

5010 Steeles Ave. W., Unit 19, (Kipling / Steeles)



## அன்றிலிருந்து இன்றுவரை சினிமா -வீணை மைந்தன்

# நான் வாழப் போகிறேன் (சுவடு 4)



அண்ணா கலையரங்கில் சந்தித்த சேலம் நண்பர் மணிநாதன் மிகவும் சுவாரஸ்யமான இரசிகர். "அண்ணே! சிவாஜியை இயக்கிய டைரக்டர்களுள் உங்களுக்குப் பிடித்தமானவர்கள் யார்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

"ஒவ்வொரு இயக்குநர்களும் ஒவ்வொரு வகையில் சிறந்தவர்கள்" என்றேன்.
"இருக்கலாம் அண்ணே! ஆனால் என்னைப் பொறுத்தவரையில் ஏ.சி. திருலோகச்சந்தர் பெஸ்ற் டைரக்டர் அண்ணை.

அண்ணே! இருமலர்கள் படம் பார்த்தீங்களா! அதில ஒரு கட்டம்! செய்து காட்டிறன் பார்ங்க. என்ன அழகான ஸ்கிரிப்ட் அது!"... (இரு மலர்கள் திரைப்படத்தில் கதாநாயகன் சிவாஜி தனது காதலியான பத்மினி தன்னை ஏமாற்றி மோசம் செய்ததாக நினைத்து அவளைச் சந்திக்க நேர்ந்த போது உரையாடும் ஒரு கட்டம்) இப்படத்திற்கு கடைசிவசனம் எழுதி இயக்கியவர் ஏ.சி. திருலோகசந்தர்)

மனைவி அருகில் இருந்தும் கூட தனது இரசிப்பித் தன்மையை வெட்கப்படாமல் நடித்துக் காண்பிக்கிறார்.

"உமா! உன்கிட்ட இருந்து லெட்டர் வரும் லெட்டர் வரும் என்று எப்படியெல்லாம் துடித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா? (அழுது கொண்டு) ஆமா! உன்னைப் பெண் பார்க்க வந்தானே அந்தப் பணக்கார வாலிபன் அவன் என்ன ஆனான்! ஆ.. நீ என்னை ஏமாற்றினமாதிரி அவனும் உன்னை ஏமாற்றிட்டு ஓடிட்டானா.... ஆ... அழுகையுடன் சிரிப்பு)
இப்ப உன்னுடைய வாழ்க்கை என்ன ஆச்சு! ஏன் இப்படி பட்ட மரம் மாதிரி நிற்கிறாய் .... (அழுகையுடன்)

அண்ணே! இந்த இடத்தில் பத்மினியை அப்பிடியே அட்ரஸ் இல்லாம பண்ணிட்டாரண்ணே! திருலோகசந்தர் என்ன நினைத்தாரோ அதை அப்படியே சிவாஜி சாரிட்டேயிருந்து கறந்தெடுத்திட்டார்!

ஆரோக்கியமான இரசிகர்களை அபூர்வமாகத்தான் சந்திக்கலாம் சில இரசிகர்கள் தங்களைக் கதாசிரியர்களாகவோ டைரக்டர்களாகவோ நினைத்துக் கொண்டுதான் படம் பார்ப்பார்கள். நண்பர் மணிநாதனிடம் இந்தப் பார்வை நிறையவே உண்டு. என்னுடைய பார்வையும் அப்படித்தான் பொதுவாக யாழ்ப்பாணத்தில் சிவாஜியின் இரசிகர்கள் இப்படிப்பட்ட பார்வையுடையவர்களாகவும் படித்தவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் நடிகர் திலகத்திற்குக் கிடைத்த உயர்மட்ட இரசிகர்கள்.

கடந்த வருடம் நவம்பரில் கொழும்பில் நடிகர் திலகம் அவர்களுக்கு இந்திய அரசின் அதியுயர் விருதான தாதேசாகேப்பால்கே விருது வழங்கப்பட்டதை யொட்டி இலங்கை வாழ் கலாபிமானிகள் பண்டாரநாயகா நினைவு மண்டபத்தில் மாபெரும் பாராட்டு விழா வெடுத்து சிவாஜி மன்னன் சூடிய கிரீடம் போன்ற முடியைப் பொன்னால் செய்து நடிகர் திலகத்திற்கு அணிவித்து மரியாதை செய்து மகிழ்ந்தார்கள்.

அதன் பின் நடந்த பத்திரிகையாளர்கள் மாநாட்டில் நடிகர் திலகம் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுள் ஒன்றுக்குச் சிவாஜி அவர்கள் சொன்ன பதில், நண்பர் மணிநாதனின் கருத்தையே எனக்கு நினைவூட்டியது.
"உங்களை வைத்துப் படம் எடுத்த இயக்குனர்களுள் தங்களைக் கவர்ந்தவர்கள் யார்?" எனக் கேள்வியெழுப்பியபோது, "எல்லா டைரக்டர்களுமே சிறந்தவர்கள் தான். ஆனால் என்னிடம் அதிகம் வேலை வாங்கிப் "ப" - "பா" வரிசையில் வெற்றிப்படங்களை எடுத்த சகோதரர் ஏ. பீம் சிங்கும், என்னிம் உள்ள திறமைகளைத் தோண்டித் தோண்டி, வெளியே கொண்டு வந்த திருவோக் சந்தரும் முக்கியமானவர்கள் என்று கூறலாம்.

இவ்விதம் இயக்குநர் திருலோக் அவர்களால் தோண்டித் தோண்டி நடிக்க வைத்த காட்சியிலொன்றையே மேலே நண்பர் மணிநாதன் நடித்துக் காண்பித்தார். இயக்குநர்கள் எதிர்பார்ப்பதை நடித்துக் காண்பிக்கும் ஆற்றல் சிவாஜிக்கு எப்படி வந்தது...! கொழும்பு பத்திரிகையாளர்கள், மாநாட்டில் இது பற்றியும் ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.

"மற்றவர்களைப் பார்த்து நான் நடிக்காமல் என்னைப் பார்த்து மற்றவர்கள் நடிக்கும் அளவிற்கு எனக்கு உறுதியான பயிற்சியையும் திடமான அத்திவாரத்தையும் ஆசீர் வாதத்தையும் வழங்கியவர் எனது குருநாதர் அமரர். சின்ன பொன்னுச்சாமிப் படையாட்சி அவர்கள். சிதம்பரத்திற்குப் பக்கத்தில் ஒரு சிறு கிராமத்தில் வாழ்ந்தவர். அவருக்குத் தான் எனது முதல் மரியாதை. எனது குருநாதர் அதிகமாகப் பெண் வேடம் தரிப்பவர். எவன் ஒருவன் பெண் வேடம் தாங்கி நடிக்கிறானோ அல்லது நடித்தானோ அவனால் தான் நடிப்பில் நல்ல பெயர் வாங்க முடியும். எம். ஜி. ஆர். பெண் வேடம் தரித்தவர். ஏ.பி. நாகராஜன் - கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இப்படிப் புகழ் பெற்ற கலைஞர்கள் யாவருமே குரு குலத்தில் பெண் வேடம் தாங்கி நடித்தவர்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்."

(தொடர்ச்சி || பக்கம்)


| | | | |
|---|---|---|---|
| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
| ல | யோகா சோதிடம் | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | 10 | 9 | பலன் பார்த்தல் |




பூச்சிகளை அழிக்க வேண்டுமா!!

உங்கள் வீடுகளில் காணப்படும் பூச்சிகள், எலிகளை அழிக்க வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்

(416) 750-1012 / (905) 839-2966 Car Phone: (416) 617-8717

கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

துரித பணமாற்றுச் சேவை

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

**நிரு வெற்று உறைகள் லேபல்களைச் சேகரித்து பெறுமதிமிக்க பரிசுகளைப் பெறுங்கள்.**

கீழக்காணும் பட்டியலில் தொகுதி Aயில் உள்ள நிரு பிராண்ட் தயாரிப்புக்களின் வெற்று உறைகள் / லேபல்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 20 புள்ளிகளும், தொகுதி Bயில் உள்ளவற்றிற்கு தலா 15 புள்ளிகளும், தொகுதி Cயில் உள்ளவற்றிற்கு தலா 10 புள்ளிகள் வீதமும் கணக்கிடப்பட்டு ஒவ்வொரு 100 புள்ளிகளுக்கும் ஒரு பெறுமதிமிக்க எவர் சில்வர்தட்டு இலவசமாக வழங்கப்படும். நீங்கள் இதுவரை சேகரித்த வெற்று உறைகள் லேபல்களுடன் இத்துடன் காணப்படும் படிவத்தை நிரப்பி வரும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டு எத்தனை எவர் சில்வர் தட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாமென்பதை அறிந்து கொள்ளலாம்.

உங்களுக்குரிய பரிசில்களைப் பெறுவதற்கான இடம் / காலம் / முடிவுத்திகதி பற்றிய அறிவிப்பு விரைவில் வெளிவரும்.

**தொகுதி A (20 புள்ளிகள்)**

| | |
|---|---|
| அமெரிக்கன் பார்பொயில் அரிசி | 20lb |
| கைக்குத்தரிசி | 5kg |
| பஸ்மதி அரிசி | 10lb |
| பசுநெய் | 227gr /454gr |
| வறுத்த சிவப்பரிசி மா | 5kg |
| நல்லெண்ணெய் | 750ml / 1lit |
| வறுத்த மிளகாய்த்தூள் | 900gr |
| உறைப்புக்கூடிய வறு. மிள. தூள். | 900gr |

**தொகுதி B (15 புள்ளிகள்)**

| | |
|---|---|
| கோப்பித்தூள் | 175gr |
| நெத்தலி - தலையற்றது | 200gr |
| அச்சாறு | 400gr |
| மீன் கறித்தூள் | 400gr |
| பத்தியத்தூள் | 400gr |
| சரக்குத்தூள் | 400gr |
| இட்லிப்பொடி | 200gr |
| குரக்கன் மா | 1kg |
| தனி மிளகாய்த்தூள்-வறுக்காதது | 900gr |
| மல்லித்தூள் | 900gr |
| இரசத்தூள் | 200gr |
| வறுத்த மிளகாய்த்தூள் | 450gr |
| வறுத்த மிளகாய்த்தூள்Cont | 450gr |
| வறுத்த உழுத்தம்மா | 900gr |
| வறுத்த பயற்றம் மா | 900gr |
| உறைப்புக்கூடிய வறு. மிள.தூள். | 450gr |

**தொகுதி C (10 புள்ளிகள்)**

| | |
|---|---|
| சவ்வரிசி | 450gr |
| வறுத்த உழுத்தம்மா | 450gr |
| ஆட்டாமா | 5lb / 10lb |
| அரிசி வெள்ளை | 2kg / 10lb |
| ஓமம் / ஓமத்தூள் | 200gr |
| பார்லி அரிசி | 200gr |
| மிளகு / மிளகுதூள் | 200gr |
| மோர் மிளகாய் | 50gr |
| மல்லித்தூள் | 450gr |
| மல்லி | 200gr/450gr |
| கறிவாசனைக் கூட்டு | 100gr |
| உடைத்த மிளகாய் | 200gr |
| சி. சீரகம் / சி. சீரகத்தூள் | 200gr |
| வெந்தயம் | 200gr/400gr |
| பெ. சீரகம் / பெ. சீரகத்தூள் | 200gr |
| கரம்மசாலா | 100gr |
| உள்ளித்தூள் | 100gr |
| வறுத்த பயறு | 450gr |
| வறுத்த சிவப்பரிசிமா | 1kg/2kg |
| வறுத்த வெள்ளை அரிசிமா | 1kg |
| வறுக்காத வெ. அரிசிமா | 900gr/1.8kg |
| எள்ளு கறுப்பு / வெள்ளை | 200gr |
| சேமியா | 200gr |
| நிரு சோயா | 250gr |
| கோப்பிக்கொட்டை | 250gr |
| கெர்ஸ் கொஸ் | 450gr |
| செத்தல் மிளகாய் | 100gr |
| கற்கண்டு | 200gr |
| பழப்புளி | 227gr |
| மஞ்சள் | 100gr |
| மஞ்சள் தூள் | 200gr |
| கடலை மா | 900gr |
| வேர்க்கொம்பு/வே.தூள் | 100gr |
| பலாப்பழம் (ரின்) | 500gr |
| சர்க்கரை | 400gr |
| மாசி துகள்கள் | 185gr |
| வேப்பம்பூ வடகம் | 75gr |
| மதராஸ் கறிப்பவுடர் | 200gr |
| பப்ரிக்கா தூள் | 200gr |
| அவல் சிவப்பு / வெள்ளை | 400gr |
| பாவக்காய் வற்றல் | 100gr |
| குத்தரிசி | 1kg |
| மிளகாய்த்தூள் (வறுக்காதது) | 200gr/450gr |
| மல்லி இலை ஊறுகாய் | 400gr |
| உள்ளி ஊறுகாய் | 400gr |
| எலுமிச்சை ஊறுகாய் | 400gr |
| மாங்காய் ஊறுகாய் | 400gr |
| நெல்லி ஊறுகாய் | 400gr |
| புழுக்கொடியல் மா | 400gr |
| பப்படம் 3", 5" | 175gr |
| கசகசா | 100gr |
| பொட்டுக்கடலை | 400gr |
| தீட்டிய சிவப்பரிசி | 1kg |
| சம்பா அரிசி/சீரகச்சம்மா | 1kg/5kg |
| சுண்டங்காய் வற்றல் | 100gr |
| சாம்பார் பொடி | 200gr |
| கடுகு | 200gr |
| அரிசிக் குறுணல் | 900gr |
| கடலைப்பருப்பு | 900g/1.8k/5k |
| உழுத்தம்பருப்பு | 900g/1.8k/5k |
| மைசூர்ப்பருப்பு | 900g/1.8k/5k |
| துவரம் பருப்பு | 900g/1.8k/5k |
| கொண்டல் கடலை | 900g/1.8k/5k |

பெயர்.................................

விலாசம்.................................

.................................

.................................

தொலைபேசி இல.................................

நிரு பிராண்ட் பொருட்களை வாங்கும் வியாபார ஸ்தாபனம்

.................................

ஒவ்வொரு 100 புள்ளிகளுக்கும் தலா ஒரு எவர்சில்வர் சாப்பாட்டுத்தட்டு இலவசம்

| | | |
|---|---|---|
| தொகுதி -A | X 20 | |
| தொகுதி -B | X 15 | |
| தொகுதி -C | X 10 | |
| | மொத்தப்புள்ளிகள் | |

NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

தரம் அது
உயர்தரம்
